

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை சென்னை அண்ணா அறிவாலயத்தில் தஞ்சாவூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ள ரெ.மதியழகன் 30.05.2025 அன்று நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். ம.பாரதிதாசன் உடன் உள்ளார்.

# மதுரை விமான நிலையத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் – கோ.தளபதி எம்.எல்.ஏ. – மு.மணிமாறன் முன்னிலையில் ஆயிரக்கணக்கான கழகத்தினர் பங்கேற்பு!

மதுரை, ஜூன் 2 -

மதுரையில் நடைபெற உள்ள கழக மாநில பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் மதுரை வந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. சார்பாக வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில், மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் பல்லாயிரக் கணக்கான கழகத்தினர் உற்சாக வரவேற்பு கொடுத்தனர்,

அரசியல் வரலாற்றில் முக்கியத்து வம் வாய்ந்ததாக கருதப்படும் பொதுக் குழுவில் கூட்டத்தில் பங்கேற்பதற்காகவும், தமிழ்நாட்டில் முதல்முறையாக சுமார் 25 கிலோமீட்டர் தூரத்திற்கு நடைபெற உள்ள மாபெரும் ரோடுஷோ நிகழ்ச்சி யில் பங்கேற்பதற்காகவும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து விமான மூலம் நேற்று முன்தினம் மதுரை வந்தார்

அங்கு மதுரை விமான நிலையத்தில் மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட திமுக சார்பாக மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ.,

மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கையில் இரு வண்ண கொடியேந்தி தலைவர் வாழ்க, முதல்வர் வாழ்க என விண்ணை முட்டும் கோஷங்கள் எழுப்பி எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்தனர்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் தலைமை கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், சட்ட மன்ற, நாடாளு மன்ற முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள், மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க.வைச் சேர்ந்த மதுரை வடக்கு, மதுரை மாநகர் மற்றும் மதுரை தெற்கு மாவட்டங்களின் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,

ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகி கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதி கள், கழகத்தினர் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பில் முதியோர் - ஆதரவற்றோர்க்கு உணவு!

## பொறுப்பாளர் அலிசேக் மீரான் - அ.இளங்கோ பங்கேற்பு!

மும்பை, ஜூன் 2 -

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மேனாள் தலைவரும் தமிழினக் காவலருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது நூற்றியி ரண்டாம் ஆண்டு பிறந்தநாள் விழா நாளை (03-06-2025 - செவ்வாய்க் கிழமை) அந்தேரி - விஜய் நகர் மரோல் மரோசி சாலையில் உள்ள "சிஸ்டர்ஸ் அடோரரர்ஸ் நவ ஜோதி ஹோம்" அனாதைச் சிறுவர்கள் இல்லத்தில் புறநகர் மாநில திமுக கழகப் பொறுப்பாளர் அலிசேக் மீரான் தலைமையில் மாலை சரியாக 7 மணியளவில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் பிகிருஷ்ணன் , வதிலை பிரதாபன் ஜேம்ஸ் தேவதாசன், அ.இளங்கோ, வே. சதானந்தன், வெ.அ.ஜெய்னுல்லாபுதீன், வீரை சோபாபு, சிவக்குமார் சுந்த ர் ராஜ், மெஹபூப் பாஷா, எஸ்.பி.குமரேசன் , சிலுவை தாசன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

மும்பை மாநில திமுக இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், கல்யாண் கிளைக்கழக அவைத்தலைவர் க.ஜீவானந்தம், பீவாண்டிக் கிளைக் கழகச் செயலாளர் மெஹபூப் பாஷா, ஜோஹேஸ்வரி கிளைக்கழகம் தமிழினநேசன், தானே கிளைச் செயலாளர் பாலமுருகன், முலுண்டு கிளைச் செயலாளர் பெருமாள், வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, வாஷி கிளைக் கழகத் தோழர்கள் தில்லை, ஆறுமுகம், எம்.இ.முத்து, குலசேகரன் ஜி.பசுபதிநாதன், சயான் கிளைக் கழகச் செயலாளர் சி.சுடலையாண்டி, சீத்தாகேம்ப் கிளைக்கழகம் சார்பில் ஆழ்வார், ராஜேந்திரன், அம்பர்நாத் கிளைக் கழகச் செயலாளர் ஜஸ்டின், திவா கிளைக்கழகச் செயலாளர் வேல்முருகன், ஆரே காலனி கிளைக் கழகம் சார்பில் கு.தர்மலிங்கம், பாண்டு, சுரேஷ், மற்றும் பல கழக உணர்வாளர்கள் நிகழ்வில் முன்னிலை வகித்துச் சிறப்பிக்கவுள்ளார்கள்.

## ஈரோடு மத்திய மாவட்ட

# இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் சிறப்புரை!

ஈரோடு, ஜூன் 2 -

ஈரோடு மத்திய மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய - நகர பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் 30.05.2025 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தோப்பு வெங்கடாசலம் கலந்துகொண்டு, இளைஞர் அணி நிர்வாகிகள் ஆற்றவேண்டிய கழகப்பணிகள் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்.







ஈரோடு வடக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சன் சுரேஷ் வரவேற்புரையாற்றினார். கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் கே.இ.பிரகாஷ் எம்.பி., பி.எஸ்.சீனிவாசன், மாநில நெசவாளர் அணிச் செயலாளர் எஸ்.எல்.டி.ப. சச்சிதானந்தம் ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்வில், சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழகச் செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைத்தளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# மதுரையில் தி.மு.க. பொதுக்குழுக் கூட்டம்!

# 27 வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானங்களின் - தலைப்புகள்!

## பொதுக்குழு உறுப்பினர்கள் கரவொலி எழுப்பி வரவேற்றனர்!

**மதுரை, ஜூன் 2 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று மதுரையில் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில்**

**27 வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அத் தீர்மானங்களின் தலைப்புகள் இங்கே வெளியிட்டுள்ளோம் அது வருமாறு:**

**எண். தலைப்பு**

1. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3ஆம் நாளை செம்மொழி நாளாக நாடெங்கும் கொண்டாடுவோம்!
2. மக்களின் பேராதரவுடன் தொடர் வெற்றி நாயகராகத் திகழும் கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுகள்!
3. இந்தியாவுக்கே முன்னோடியாக மகளிர் வாழ்வை மேம்படுத்தும் திராவிட மாடல் அரசு!
4. உழவர்கள் - நெசவாளர்கள் - மீனவர்கள் என அனைத்துத் தரப்பினரின் வாழ்விலும் புதிய விடியல் தந்த திராவிட மாடல் அரசின் சாதனைகளைப் பரப்புவோம்!
5. தமிழினத்திற்குப் பெருமை சேர்த்த தலைவர்களைப் போற்றும் கழக அரசுக்குப் பாராட்டு!
6. ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றுள்ள திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களைத் தொடர்ந்து மக்களிடம் எடுத்துரைப்போம்!
7. தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையாக மக்களின் பேராதரவைப் பெற்றுள்ள துணை முதலமைச்சர் - இளம் தலைவர் அவர்களின் பணி தொடரத் துணை நிற்போம்!
8. ஏழை - எளிய மக்களை வதைக்கும் நகைக்கடன் கட்டுப்பாடுகளை ரிசர்வ் வங்கி உடனே நீக்க வேண்டும்!
9. தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய நிதியைத் தர மறுக்கும் ஒன்றிய அரசுக்குக் கண்டனம்!
10. தமிழர்களின் மொழி உணர்வுடன் விளையாடாமல் இந்தித் திணிப்பைக் கைவிடுக!
11. கீழடி ஆய்வை மறுக்கும் தமிழ் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்!
12. இரயில்வே திட்டங்களில் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கும் பா.ஜ.க அரசுக்கு கண்டனம்!
13. சிறுபான்மையினர் உரிமைகளைப் பறிக்கும் நோக்கில் இசுலாமியர் சொத்துக்களைச் சூறையாடும் வக்பு திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுக!
14. ஒன்றிய விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்தும் பா.ஜ.க. அரசுக்குக் கண்டனம்!
15. மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் தொடரும் அநீதிகள்!
16. மீனவர்கள் நலன் காக்க கச்சத்தீவை மீட்டிடுக!
17. சாதிவாரிக் கணக்கெடுப்பை விரைவாகவும் முறையாகவும் நடத்திடுக!
18. தமிழ்நாட்டின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுவரையறை கூடாது!
19. ஆளுநரின் அதிகார வரம்பை வரையறுத்து மாநில உரிமையை நிலைநாட்டிய உச்சநீதிமன்ற தீர்ப்புக்குக் காரணமான கழகத் தலைவருக்குப் பாராட்டு!
20. குடியரசுத் துணைத் தலைவரின் விமர்சனத்திற்குக் கண்டனம்!
21. அரசியலமைப்புச் சட்டத்தை மதிக்காமல் உச்சநீதிமன்றத்தோடு மோதும் பா.ஜ.க அரசுக்குக் கண்டனம்!
22. உச்சநீதிமன்றத் தீர்ப்பை முன்வைத்துக் கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் இணைத்திடுக!
23. மலரட்டும் மாநில சுயாட்சி!
24. பேரிடர் மீட்புப் பணியில் கழக அரசுடன் கழகத்தினரும் துணை நிற்போம்!
25. எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என அழகிய தமிழ்ப்பெயர்களைச் சூட்டுவோம்!
26. அ.தி.மு.க. ஆட்சியின் அவலமான பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு வரவேற்பு!
27. வஞ்சக பா.ஜ.க.வையும் துரோக அ.தி.மு.க.வையும் விரட்டியடித்து 2026இல் கழக ஆட்சி தொடர களப்பணியைத் தொடங்குவோம்!